මැතිවරණ කොමිෂන් සභාව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

தேர்தல் ஆணைக்குழு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Election Commission

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

<u>படிவ இலக்கம் : 01</u>

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல :- 79
நிறுவனத்தின் பெயர் :- தேர்தல் ஆணைக்குழு

குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்		குறைபாடுகளை சீர் செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை
01.	உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில் அளிக்கப்படாமை.	ஒரு மாத காலத்திற்குள் பதிலைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
02.	மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் திட்டமிட்டபடி நடாத்தப்படாமை.	2023 ஆம் ஆண்டில், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
03.	2017.06.26 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் புறத்தொதுக்கல்கள் பற்றிய தகவல்கள், கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டிராமை.	சொத்துக்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்படாமை காரணமாக புறத்தொதுக்கல்கள் பற்றி மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் சம்பந்தமாக கொம்ட்ரோலர் ஜெனரலுக்கு அறிவிக்கப்படவில்லை. தற்போது பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் தகவல்களை சமர்ப்பிப்பதற்குமுடியும்.
04.	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிராமை	இந்த ஆணைக்குழு ஒரு சுதந்திரமான நிறுவனமென்பதனால் இரகசியத்தை பாதுகாக்கும் வகையில் அரச இலச்சினை பொறிக்கப்படவில்லை. ஆனால், அனைத்து வாகனங்களினதும் முன்பக்கத்திலும் தேர்தல் ஆணைக்குழு எனும் பெயர்ப்பலகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
05.	நி.பி. 94(1) இன் பிரகாரம் செலவு விடயமொன்றுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டைப் பயன்படுத்திய பிறகு, ஆண்டின் இறுதியில் மீதமுள்ள ஒதுக்கீட்டின் வரம்பை மீறிய பொறுப்புக்களை ஏற்படுத்திக்கொண்டிருத்தல்.	நி.பி. 94(2) மற்றும் 94(3) இன் பிரகாரம் அலுவலக நடவடிக்கைகளை இடையூகளின்றி மேற்கொள்வதற்காக மேற்கூறிய பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்காலத்தில், நி.பி. 94(1) இன் பிரகாரம் பொறுப்புக்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
06.	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் ஊடாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்கள் 50%ட இலும் குறைந்த மட்டத்தில் நிலவுதல்.	2022 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 50% குறைப்புச் செய்யப்பட்டமையின் காரணமாக திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களின் அளவை அடைய முடியவில்லை. வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளில் 92.8% செலவிடப்பட்டுள்ளது.
07.	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வுக் கருத்துரை, கீழ் மட்டத்தில் / கைதுறப்பு மட்டத்தில் / பாதிப்பு மட்டத்தில் நிலவுதல்.	நிலையான சொத்துக்களின் தொடக்க நிலுவைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் உரிய பிரகாரம் கணக்கில் பதியப்படாத சில நிலையான சொத்துக்கள் காரணமாக பாதகமான அல்லது கைதுறப்பு மட்டத்திலான கணக்காய்வுக் கருத்துரை நிலவினாலும் தற்போது அந்தக் குறைபாடுகள் சரி செய்யப்பட்டு சிறந்த கணக்காய்வுக் கருத்துரையைப்

		பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
08.	2020.08.28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 ஆம் பந்திக்கமைய நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் தெளிவான வகையில் அதன் முன்னேற்றத்தை அளவிட முடியுமான 03 செயலாற்றுகை குறிகாட்டிகள் இனங்கண்டுகொள்ளப்பட்டிருக்காமை.	தேருநர் (வாக்காளர்) இடாப்பை தயாரித்தல், தேர்தலை நடாத்துதல், அரசியல் கட்சிகளை பதிவு செய்தலுடன் தொடர்புடைய முன்னேற்றத்தை அளவிட முடியுமான 04 செயலாற்றுகை குறிகாட்டிகள் இனங்காணப்பட்டுள்ளது. i. தேருநர் (வாக்காளர்) இடாப்பு மற்றும் வாக்குகளின் எண்ணிக்கை ii. நடாத்தப்பட்ட தேர்தல்களின் எண்ணிக்கை iii. பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை iv. திருத்தப்பட்ட சட்டங்களின் எண்ணிக்கை
09.	ஒட்டுமொத்த ஆளணி உட்பட செயலாற்றுகை உடன்படிக்கைகளை தயாரித்து கைச்சாத்திடப்படாமை.	இது சம்பந்தமாக தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
10.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் / பிழைகளை சரி செய்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் அனைத்து அலுவலர்களுக்கம் வழங்கப்பட்டுள்ளது.

தலைமை கணக்கீட்டு அலுவலர்

பெயர்:- சமன் ஸ்ரீ ரத்னாயக்க
பதவி :- தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
திகதி:- 2024.10.30